# 20-12-2024 செய்தி

## உரிமை கோரப்படாத சேமிப்பு....!

- வங்கிகளின் வாராக்கடன்களைப் போலவே உரிமை கோரப்படாமல் வைப்புநிதி, சேமிப்புக் கணக்குகளில் தேங்கிக் கிடக்கும் தொகையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
- உரிமை கோரப்படாத வங்கிக்கணக்கு பாக்கிகளை அதற்குரியவர்களிடம் திருப்பிக் கொடுக்கும் முனைப்பில் அரசும், ரிசர்வ் வங்கியும் இறங்கியிருப்பது வரவேற்புக்குரியது.
- மார்ச் 2023 வரையில் ரூ.42,272 கோடி உரிமையாளர்களால் கோரப்படாமல் வாடிக்கையாளர்களின் கணக்குகளில் காணப்பட்டது. முந்தைய நிதியாண்டை விட இது 25% அதிகம்.
- 2023-இல் நிதியமைச்சகம் வங்கிகளில் நூறு நாள்களில் நூறு முக்கியமான உரிமை கோரப்படாத கணக்குகளில் நிலுவைத் தொகையை உரியவர்களிடம் ஒப்படைக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதன்மூலம் ரூ.1,432 கோடி திருப்பி வழங்கப்பட்டது. மொத்த நிலுவைத் தொகையில் அது 1% கூட இல்லை.
- உரிமை கோரப்படாத தொகை என்பது சேமிப்புக் கணக்கிலோ, நடப்புக் கணக்கிலோ பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்படாமல் இருக்கும் வங்கிக் கணக்குகளில் காணப்படும் சேமிப்புகள்; அதே போல வைப்புநிதியில் முதிர்வுத் தேதி முடிந்து பத்து ஆண்டுகளாக உரிமை கோரப்படாமல் இருப்பவையும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.
- இந்த நிலுவைத் தொகைகள் ரிசர்வ் வங்கியால் நிர்வகிக்கப்படும் 'டி.இ.ஏ' நிதிக்கு மாற்றப்படுகிறது. உரித்தான வட்டியுடன் எப்போது வேண்டுமானாலும், அவர்களது பணத்தை உரிய வங்கியிலிருந்து திருப்பிக் கோரும் உரிமை வாடிக்கையாளருக்கு உண்டு.
- உரிமை கோரா கணக்குகளுக்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். செயல்படாத கணக்குகளை முறையாக முடித்து கொள்ளாதது; முதிர்வடைந்த வைப்புநிதியை கோராமல் இருப்பது; காலமாகிவிட்ட வாடிக்கையாளர்களின் வாரிசுதாரர்கள் உரிமை கோராமல் இருப்பது உள்ளிட்டவை அவற்றில் முக்கியமானவை.
- ரிசர்வ் வங்கியின் 'டி.இ.ஏ' நிதியில் 2022-23-இல் நிலுவைத் தொகையாக இருந்த ரூ.62,224.89 கோடி, 2023-24-இல் ரூ.78,212.53 கோடியாக 26% அதிகரித்தது.
- இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வதற்கு ரிசர்வ் வங்கி பல முனைப்புகளை முன்னெடுத்தது.
- 'வாடிக்கையாளர்களுக்கு அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு அவர்களின் சேமிப்பு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்' என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வங்கிகளை அறிவுறுத்தவும் தவறவில்லை.
- 'டி.இ.ஏ' நிதியில் பத்து ஆண்டுகளுக்கோ அல்லது அதற்கு மேலோ உரிமை கோரப்படாத வங்கிக் கணக்கு நிலுவைகள் மட்டுமே சேர்க்கப்படுகின்றன.
- இரண்டு ஆண்டுகளுக்கு மேல் செயல்படாமல் இருக்கும் வங்கிக் கணக்குகளில் காணப்படும் வாடிக்கையாளர்களின் சேமிப்பு அதைவிடப் பல மடங்கு அதிகம்.
- அதனால்தான் டி.இ.ஏ. நிதியில் சேர்ந்துவிடாமல், வாடிக்கையாளர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களது சேமிப்பை உரியவர்களிடம் ஒப்படைக்கும் முயற்சியில் ரிசர்வ் வங்கி முனைப்புக் காட்டுகிறது.
- செயல்படாத வங்கிக் கணக்குகளுக்கு, வாரிசுதாரர்களை அடையாளம் காட்டாமல் இறந்துவிடும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் முக்கியமான காரணம்.
- வாரிசுதாரர்கள் அடையாளம் காட்டப்படாத கணக்குகளில், காணப்படும் சேமிப்பை அவர்களது சட்டரீதியான வாரிசுதாரர்களிடம் ஒப்படைக்க நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.
- தற்போது காணப்படும் நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டால், வாடிக்கையாளர்களின் வாரிசுகள் உரிமை கோருவது அதிகரிக்கும்.
- வாடிக்கையாளர்கள், வாரிசுதாரர்கள், சட்டப்பூர்வ ரத்த உறவுகள் ஆகியோர் தங்களது உரிமை கோரப்படாத வங்கிக் கணக்குகளை அடையாளம் காணவும், உரிமை கோரவும் ரிசர்வ் வங்கி எல்லா ஷெட்யூல்டு வங்கிகளுக்கும் சில நடைமுறைகளை அறிவுறுத்தியிருக்கிறது.
- வங்கிகள் தங்களது இணையதளத்தில் உரிமை கோரப்படாத கணக்குகளின் பட்டியலை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.
- அந்தப் பட்டியலில் வாடிக்கையாளர்களின் பெயர், முகவரி, டி.இ.ஏ.நிதிக்கு மாற்றப்பட்டிருந்தால் கோரப்படாத வைப்புத் தொகையின் எண் ஆகியவை தரப்பட வேண்டும். அதன்மூலம் மக்கள் தொடர்புடைய வங்கிகளை அணுகி, உரிமை கோரமுடியும்.
- அதேநேரத்தில், கணக்கு எண், கணக்கில் காணப்படும் தொகை, வங்கிக் கிளையின் விவரம் ஆகியவை அதில் குறிப்பிடப்படுவதில்லை.
- வங்கிக் கணக்குகள் செயல்படாமல் இருப்பதற்கு வாடிக்கையாளர்களின், இடமாற்றம் முக்கியமான காரணம். ஓர் ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு இடம்பெயரும்போது, தங்களது வங்கிக் கணக்குகளை அப்படியே விட்டுவிட்டு இன்னொரு வங்கியில் புதிய கணக்கைத் தொடங்குகிறார்கள்.
- வங்கிக் கணக்குகளை எந்த ஊருக்கும் அதே வங்கி எண்ணோடு மாற்றிக் கொள்ளும் வசதி ஏற்பட்டால் இந்தப் பிரச்னை ஓரளவுக்குக் குறையும்.

## சுற்றுச்சூழல் பாதிப்புகள் தீவிரமடைந்த ஆண்டு

- டிசம்பர் 9ஆம் தேதியன்று ஐரோப்பாவின் காலநிலை மாற்றத்ததை எதிர்கொள்வதற்கான கோப்பர்நிக்ஸ் சேவை அமைப்பு (Copernicus Climate Change Service) ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையில், 2024 ஆம் ஆண்டு வரலாற்றிலேயே மிகவும் வெப்பமான ஆண்டு (Hottest year on record) என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் சராசரி உலகளாவிய வெப்பநிலை 1.6 டிகிரி செல்சியஸாக இருந்தது. தொழிற்புரட்சிக்கு முந்தைய காலக்கட்டத்தோடு ஒப்பிடும்போது, உலகளாவிய வருடாந்திர சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸிக்கு மேல் அதிகரித்திருப்பது இதுவே முதல் முறை.

**கவலையூட்டும் பேரிடர்கள்**

- இந்த ஆண்டு மொத்தம் 124 காலநிலை சார்ந்த பேரிடர்கள் ஏற்பட்டுள்ளன. இரண்டு வறட்சிகள், 10 வெப்ப அலைகள், 17 நிலச் சரிவுகள் (இவற்றின் பல நிகழ்வுகள் வெள்ளத்தால் ஏற்பட்டவை), 58 வெப்பமண்டலப் புயல்கள்,37 காட்டுத்தீ நிகழ்வுகள் எனப் பல விதங்களில் இவை நிகழ்ந்துள்ளன.
- இந்தியாவில் 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகள் பற்றிய ஒரு விரிவான அறிக்கையை அறிவியல்-சுற்றுச்சூழல் மையம் வெளியிட்டிருக்கிறது.
- அதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் 93% நாள்களில் ஏதேனும் ஒரு தீவிர வானிலை நிகழ்வு ஏற்பட்டிருக்கிறது. இவற்றால் மொத்தம் 3,238 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.
- 32 லட்சம் ஹெக்டேர் விளைநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. 9457 கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன. மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் மத்தியப் பிரதேசம் முதல் இடத்தில் இருக்கிறது. உயிரிழப்பு என்கிற வகையில் மிகவும் பாதிப்படைந்திருக்கும் மாநிலம் கேரளம், வெள்ளத்தால் மட்டுமே இந்தியாவில் இந்த ஆண்டு 1,376 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.
- வெப்ப அலையால் உயிரிழந்தோர் 210 பேர், தீவிர வானிலை நிகழ்வுகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது.

**உச்சிமாநாடுகளால் என்ன பலன்?**

- உயிர்ப்பன்மைக்கான 16 ஆவது உச்சி மாநாடு கொலம்பியாவில் அக்டோபர் 21 முதல் நவம்பர் 1 வரை நடைபெற்றது. மரபணு சார்ந்த வளங்களில் இருந்து கிடைக்கும் பயன்களை நியாயமான முறையில் பங்கிட்டுக்கொள்வது, உயிர்ப்பன்மையைக் காப்பதில், தொல்குடிகளின் பங்களிப்பை அங்கீகரிப்பது எனப் பல முக்கிய முடிவுகள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டன.
- காலநிலை மாற்றத்துக்கான 29 ஆவது உச்சமாநாடு நவம்பர் 11 முதல் 22 ஆம் தேதிவரை அசர்பைஜானில் நடந்தது. காலநிலை நிதி ஒதுக்கீட்டை மூன்று மடங்காக உயர்த்துதல், கரிமச் சந்தை பற்றிய முன்னெடுப்புகள் ஆகியவை இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள், ஆனால், காலநிலைச் செயல்பாடுகளின் தீவிரத்தன்மைக்கு ஏற்றவாறு இந்த மாநாட்டில் முடிவுகள் எட்டப்படவில்லை.
- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான 16 ஆவது உச்சிமாநாடு சௌதி அரேபியாவில் டிசம்பர் 2 முதல் 13 ஆம் தேதி வரை நடைபெற்றது. சீர் குலைந்த நிலத்தை மீட்டெடுப்பது, வறட்சியிலிருந்து மீள்வது, பெண்களுக்கான நில உரிமைகள் போன்ற முக்கிய அம்சங்கள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

**செயல்பாடுகளில் போதாமை**

- 2024இல் உலகளாவிய கரிம உமிழ்வுகளின் அளவு 3,740 கோடி டன்னாக இருந்தது. 2023 ஆம் ஆண்டின் அளவைவிட இது 0.8% அதிகம், 2024 டிசம்பரில் வெளியான ஓர் ஆய்வுக் கட்டுரையில், ஓர் ஆண்டுக்கு 10 லட்சம் சதுர கிலோமீட்டர் நிலம் பாழாகிவருவது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.
- ஆண்டுதோறும் காடழிப்பு அதிகரித்தபடியே இருக்கிறது. இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் கடலின் வெப்ப நிலை அதீதமாக உயர்ந்தது. இதனால் உலகளாவிய பவளத்திட்டு வெளிறுதல் நிகழ்வு (Global coral bleaching event) ஏற்பட்டது. சூழலியலைப் பாதுகாக்கும் செயல்பாடுகளில் உள்ள போதாமையை இவை சுட்டிக்காட்டுகின்றன.
- கரிம உமிழ்வுகளைக் குறைக்க வேண்டும் என்றும் காலநிலைப் பிரச்சினைகளைச் சரிசெய்ய நிதி வேண்டும் என்றும் மூன்றாம் உலக நாடுகள் தொடர்ந்து குரல் கொடுத்துவருகின்றன.

**பரிந்துரைகள்**

- சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தக்கூடிய (Legally binding) ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். உறுதிமொழிகளைப் பின்பற்றாத நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற விதிமுறை இருந்தால், சூழலியல்சார் செயல்பாடுகளில் நாடுகள் தீவிரமாக இயங்கும்.
- சர்வதேச நீதிமன்றமும் ஐ.நா. அவையும் இணைந்து இதற்கான ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.
- நிலக்கரியைச் சார்ந்திருக்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மாற்று எரிபொருளைக் கண்டறிய வேண்டும். இந்தத் தேடுதலுக்கும் ஆய்வுக்குமான நிதி ஒதுக்கப்பட வேண்டும். காடழிப்பைத் தடுக்கும் வகையில் கடுமையான சர்வதேசச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.
- காலநிலை-சுற்றுச்சூழல்-உயிர்ப்பன்மை எனப் பல்வேறு கோணங்களில் உலகளாவிய பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். கரிமச் சந்தைக்கான விதிமுறைகளும் கடல் வளங்கள் பற்றி விதிமுறைகளும் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்தை கட்டுக்குள் வைப்பதிலும் நாடுகள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

## உச்சம் தொட்ட தங்க இறக்குமதி

- நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் தங்கம் இறக்குமதி 49 சதவீதம் உயர்ந்து சுமார் 4,900 கோடி டாலராக உள்ளது. இது, 2023-24-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 3.293 கோடி டாலராக இருந்தது என்று வர்த்தகத் துறை அமைச்சக தரவுகள் தெரிவிக்கின்றன.
- பட்ஜெட்டில் மத்திய அரசு தங்க இறக்குமதி வரியை 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைத்தது அதன் இறக்குமதி புதிய உச்சத்தைத் தொட்டதற்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.
- தங்க இறக்குமதி நவம்பரில் 331 சதவீதம் உயர்ந்திருப்பது. 2023-24-ஆம் நிதியாண்டில் நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.
- 2023-24-ஆம் நிதியாண்டு முழுமைக்கும் இந்தியாவின் தங்க இறக்குமதி 30 சதவீதம் அதிகரித்து 4.554 கோடி டாலராக இருந்தது.
- இந்தியாவின் தங்க இறக்குமதிக்கு ஸ்விட்சர்லாந்து மிகப் பெரிய ஆதாரமாக உள்ளது.
- நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 40 சதவீத தங்கம் இந்த நாட்டிலிருந்து இறக்குமதியாகிறது.
- ஸ்விட்சர்லாந்தைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவின் தங்க இறக்குமதியில் 16 சதவீதத்திற்கும் மேல் பங்கு வகிக்கிறது.
- இது தவிர, தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தங்கம் 10 சதவீத பங்கு வகிக்கிறது.
- இந்தியாவின் மொத்த இறக்குமதியில் தங்கத்தின் பங்களிப்பு 5 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- சீனாவுக்கு அடுத்தபடியாக, உலகிலேயே இந்தியாதான் தங்கத்தை அதிகம் இறக்குமதி செய்கிறது.

ARISE AWAKE ACHIEVE
SURESH' IAS ACADEMY